தேர்வுகள் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் - கிருஷ்ணகிரி மாவட்டம் - அனைத்திந்திய பணிகள் மற்றும் தமிழ்நாடு மாநில பணியாளர்களுக்கு அரையாண்டு மற்றும் மொழித்தேர்வுகள் மே 2021-ல் நடைபெற உள்ளது - தொடர்பாக.

**அ.கு.23605/2020/க்யூ1**

**பணிந்தனுப்பப்படுகிறது**

பார்வை: 1) தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்,தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களது கடிதம் எண்.2297/QD A1/2020 நாள்: 26.08.2020
2) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அறிவிக்கை நாள்: 31.08.2020.

********

அனைத்திந்திய பணிகள் மற்றும் தமிழ்நாடு மாநில பணிகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் அரையாண்டு மற்றும் மொழித்தேர்வுகள் எதிர்வரும் மே 2021 அன்று நடைபெற உள்ளதாக பார்வை 1-ல் கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் அறிவிக்கையில் எதிர்வரும் அரையாண்டு தேர்வுகள், அனைத்திந்திய பணிகளில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு மாநில பணிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மொழித்தேர்வுகள் ஆகியவை எதிர்வரும் 04.05.2021 (செவ்வாய்கிழமை) முதல் 08.05.2021 (சனிக்கிழமை) வரையும், குரல் தேர்வு 08.05.2021 (சனிக்கிழமை) அன்றும் நடைபெற உள்ளதாகவும், மேற்படி தேர்வுகள் சென்னையில் மட்டுமே நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்தேர்வுகளுக்கு தேர்வர்கள் இணைய வழியில் மட்டுமே விண்ணப்பிக்க இயலும் என்றும், தட்டச்சு செய்யப்பட்ட / எழுத்துப்பூர்வமாக அனுப்பப்பட்ட / நகலெடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்றும், மேற்படி தேர்வுகள் தற்பொழுது பணியில் இருப்போரால் மட்டுமே எழுத இயலும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வுக்கு விண்ணப்பிக்க கடைசி தேதி 19.04.2021 (திங்கட்கிழமை) மாலை 5.45 மணி வரை மட்டுமே என்றும், "Revenue Survey" & "Finance" தேர்வெழுத வரும் தேர்வர்கள் உதவி/துணை ஆட்சியருக்கான நில அளவை / கருவூல பயிற்சி மேற்கொள்ளும் பயிற்சியாளர் என்பதற்கான சான்றிதழினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தேர்வு குறித்து உள்ளூர் செய்தித்தாள்களில் பத்திரிக்கைச் செய்தியாக வெளியிட கிருஷ்ணகிரி மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களுக்கும், கிருஷ்ணகிரி மாவட்ட இணையதளத்தில் பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் விளம்பரம் செய்திட மாவட்ட தேசிய தகவல் மைய அலுவலருக்கும் அனுப்பும் பொருட்டு கடித வரைவு மற்றும் பத்திரிக்கைச்செய்தி ஆகியவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஒப்புதலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

அனைத்திந்திய பணிகள் மற்றும் தமிழ்நாடு மாநில பணிகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் அரையாண்டு மற்றும் மொழித்தேர்வுகள் எதிர்வரும் மே 2021 அன்று நடைபெற உள்ளது.

மேற்படி அரையாண்டு தேர்வுகள், அனைத்திந்திய பணிகளில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு மாநில பணிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மொழித்தேர்வுகள் ஆகியவை எதிர்வரும் 04.05.2021 (செவ்வாய்கிழமை) முதல் 08.05.2021 (சனிக்கிழமை) வரையும், குரல் தேர்வு 08.05.2021 (சனிக்கிழமை) அன்றும் சென்னையில் மட்டுமே நடைபெறும்.

"Revenue Survey" & "Finance" தேர்வெழுத வரும் தேர்வர்கள் உதவி/துணை ஆட்சியருக்கான நில அளவை/கருவூல பயிற்சி மேற்கொள்ளும் பயிற்சியாளர் என்பதற்கான சான்றிதழினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும்.

First Class Language Test Part-II தேர்வானது எழுத்துத் தேர்வு மற்றும் குரல் தேர்வு என இரண்டு கட்டங்களாக நடைபெறும். எழுத்துத் தேர்வு மற்றும் குரல் தேர்வானது 04.05.2021 முதல் 08.05.2021 வரை நடைபெறும்.

**இத்தேர்வுகளுக்கு தேர்வர்கள் இணைய வழியில் (www.tnpsc.gov.in/ www.tnpscexams.net) One Time Registration மூலம் எதிர்வரும் 19.04.2021 (திங்கட்கிழமை) மாலை 5.45 மணி வரை மட்டுமே விண்ணப்பிக்க இயலும் என்றும், தேர்வு கட்டணமாக பிரதி தேர்வு/மொழிக்கு ரூ.5/- எனவும், தட்டச்சு செய்யப்பட்ட/எழுத்துப்பூர்வமாக அனுப்பப்பட்ட/நகலெடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்றும், மேற்படி தேர்வுகள் தற்பொழுது பணியில் இருப்போரால் மட்டுமே எழுத இயலும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

ஒம்/- வி.ஜெயசந்திர பானுரெட்டி
மாவட்ட ஆட்சியர்
கிருஷ்ணகிரி.

//உண்மை நகல்//

மாவட்ட ஆட்சியருக்காக
கிருஷ்ணகிரி.